வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
PERMIT NO:DFE/RD/0117
390, HOSPITALROAD, JAFFNA.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com　மலர் : 05　30.08.2024 வெள்ளிக்கிழமை　இதழ் : 243　பக்கங்கள் : 12

அரியநேத்திரனுக்கு அதிகரிக்கும் ஆதரவு

# சுமந்திரன், சாணக்கியனை நிராகரித்தது தமிழ் அரசு கட்சி

திருகோணமலை, ஓக. 30

திருகோணமலை மாவட்ட தமிழ் அரசு கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனை கட்சி ஆதரிக்க வேண்டுமென்று தீர்மானம் எடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. குகதாசனை சந்தித்த போதே இதனை வலியுறுத்தினர். 20 பேர் இந்தச் சந்திப்பில் பங்கு கொண்டிருந்தனர். அவர்களில் 19 பேர் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்தனர்.

அண்மைக்காலமாக பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன் மற்றும் இரா. சாணக்கியனுக்கு

11

# என்னை தோற்கடிப்பது இனத்தின் தோல்வியே!

### தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

கிளிநொச்சி, ஓக. 30

தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடும் என்னைத் தோற்கடிக்க வேண்டும் என்று சிலர் கூறி வருகின்றனர். உண்மையில் தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடும் என்னைத் தோற்கடிப்பது என்பது எமது இனத்தையே தோற்கடிப்பதற்கு சமனாகும் என்பதனை மக்கள் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும் என பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்றாவது நாளாக நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட

11

# 13இன் அதிகாரங்களுடன் புதிய அரசமைப்பு வரும்

### சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

- அதிகாரப்பகிர்வுடன்கூடிய பாராளுமன்ற முறைமை
- 6 மாதங்களுக்குள் மாகாண சபைகளுக்கு தேர்தல்
- கிராம, நகர ஜனநாயக அரசுகள் உருவாக்கப்படும்

கொழும்பு, ஓகஸ்ட் 30

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் ஒரே நாட்டுக்குள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய பாராளுமன்ற முறைமைக்கு மாற்றும் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். அந்த புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை 13 ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த தனது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

# போலி வாக்குறுதிகளை நான் வழங்க மாட்டேன்

### ஜனாதிபதி ரணிலின் தேர்தல் விஞ்ஞாபனம்

கொழும்பு, ஓகஸ்ட் 30

போலி வாக்குறுதிகளை வழங்கி நாட்டை மீண்டும் சரிவுக்குள் தள்ளிவிட வேண்டிய தேவை எனக்கு இல்லை. என்னால் வழங்கக் கூடியவற்றை மாத்திரமே வாக்குறுதியாக வழங்க முடியும். என்னால் முடியாததை வாக்குறுதியளித்து நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடைச் செய்ய நான் தயாரில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் 05 வருடங்களில் நாட்டுக்காக தன்னால் இயன்றதை செய்து இளைஞர்களுக்காக கடன் சுமையற்ற அபிவிருத்தியடைந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

வாழ்க்கை சுமையைக் குறைத்தல், தொழில் வாய்ப்புகளை வழங்குதல், வரி நிவாரணம் வழங்குதல், பொருளாதார மேம்பாடு, உறுமய மற்றும் அஸ்வெசும வேலைத் திட்டங்களை செயல்படுத்தி ஒவ்வொரு பிரஜைக்கும் காணி அல்லது வீட்டு உரிமை

11

## நீதிமன்றம் மீது தாக்குதல் நான்கு பேர் குற்றவாளிகள்

### 48 சந்தேக நபர்கள் விடுவிப்பு

மன்னார், ஓக. 30

கடந்த 2012 ஆம் ஆண்டு மன்னார நீதிவான் நீதிமன்றம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கு நேற்றைய தினம் தீர்ப்புக்காக மன்னார் மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது 52 சந்தேக நபர்களில் நால்வர் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏனைய 48 சந்தேக நபர்களும் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

11

## மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஒருபோதும் செயல்படமாட்டோம்

### தமிழ்ப் பொது வேட்பாளர் பற்றி பதிலளித்த கலையரசன் எம். பி.

கல்முனை, ஓக. 30

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் மக்களின் கருத்துக்கேற்பவே செயல்படுவோம் என்று இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன்

11



உலகப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாவில் நேற்று தங்கரதத்தில் முருகப் பெருமான் எழுந்தருளிய தருணம்... (படம் - ஐ. சிவசாந்தன்)

## காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிகோரி மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 30

இலங்கை அரச படைகளால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்றலில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

11

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இலங்கையில்

கொழும்பு, ஓக. 30

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் நேற்று வியாழக்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்தார்.

இதன்போது, இலங்கை - இந்திய இருதரப்பு உறவைப் பலப்படுத்த வேண்டும் என இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் பிரதமரிடம் வலியுறுத்தினார்.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழாவில் நேற்றுக் காலை கஜவல்லி மகாவல்லி உற்சவம் நடைபெற்றது. (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# நல்லூர் ஆலய சூழலில் இன்றைய நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஓக. 30

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை நவாலி கதிர்காம முருகன் குழுவினரின் பஜனை நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • • • •

யாழ்ப்பாணம், ஓக. 29

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

நல்லூர் வீரமாகாளி அம்மன் தேவஸ்தான முதன்மை பிரதம குரு கலாநிதி ராஜசிறீ சிவகமல்ராஜ் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் பிரதம அதிதியாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நடனத்துறை தலைவர் செல்வி மைதிலி அருளையா கௌரவ அதிதியாகவும் காரைநகர் கிழவன்காடு கலாமன்ற போசகர் கலாபூஷணம் மு. சு. வேலாயுதபிள்ளை சிறப்பு அதிதியாகவும் பங்கேற்பர்.

இதில், கிழவன் காடு கலா மன்ற அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் தலைமையில் "ஆன்மிக நாட்டத்தை பெரிதும் வெளிப்படுத்துவோர் இளையவர்களா? - முதியோர்களா?", என்னும் தலைப்பிலான சிறப்பு பட்டிமன்ற நிகழ்வும் நடைபெறவுள்ளன. என்பன நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் அனலைதீவில் விசேட நடமாடும் சேவை



யாழ்ப்பாணம், ஓக. 30

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் அனலைதீவு பிரதேச மக்களுக்கான ஆலோசனை வழங்கலும் சேவையும் நேற்று நடைபெற்றன.

இதன்போது, அரச நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அனலைதீவு பிரதேசத்தில் நடத்தப்பட்ட இந்த நடமாடும் சேவையில்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சேவைகளை தீவுப் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கும் நோக்குடனும், ஏனைய நிறுவனங்களின் சேவைகள் தொடர்பில் மக்களுக்கு விழிப்பூட்டும் நோக்குடனும், முறைப்பாடுகள் மேற்கொள்வதில் மக்களுக்கு உள்ள இடர்பாடுகளை இலகுபடுத்தும் நோக்குடனும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலய குழுவினரால் அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளா சதீசன் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் சட்டத்தரணி கபிலன் வில்வராஜன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், ஊர்காவற்றுறை பிரதேச செயலக காணிப் பிரிவு அதிகாரிகள், மேலதிக மாவட்ட பதிவாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், வடக்கு மாகாணக் காணி நிர்வாகத் திணைக்களம், தீவக வலயக் கல்விப் பணிமனை, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இந்த நடமாடும் சேவையில் அனலைதீவு மக்களது சமூக பொருளாதார உரிமைகள் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டதுடன், அனலைதீவில் இயங்கும் பாடசாலைகள் மற்றும் பிரதேச மருத்துவமனைக்கும் சென்று அங்குள்ள குறைபாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்துள்ளார். (எ)

# புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

முல்லைத்தீவு, ஓக. 30

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகமும் புதுக்குடியிருப்பு பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் 2024 ஆம் ஆண்டுக்கான புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நாளை 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை அரங்கில் நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு பதில் பிரதேச செயலாளரும் புதுக்குடியிருப்பு பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவருமான சி. ஜெயகாந்த் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் ம. செல்வரட்ணமும் சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இராமசாமி மதியரசியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த விழாவில் புதுக்குடியிருப்பு பிரதேச கலைஞர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன என்பதுடன், விசேட நிகழ்வாக புதுவைக் கலைச்சுடர் விருது வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளது. (எ)

# கெஹலிய உட்பட நால்வருக்கும் விளக்கமறியல் நீட்டிப்பு

கொழும்பு, ஓக. 30

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட நால்வரை எதிர்வரும் செப்ரெம்பர் 12 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு, மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் நால்வரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கடந்த பெப்ரவரி 02 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# யாழ்ப்பாணத்தவர் வவுனியாவில் கூரிய ஆயுதத்தால் குத்திக்கொலை

வவுனியா, ஓக. 30

வவுனியாவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்தாரென பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கற்பகபுரம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தனது நண்பர்களுடன் குறித்த குடும்பஸ்தர் நின்றபோது அங்கு வந்த குழுவொன்றால் கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து, காயமடைந்த நபர் வவுனியா மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் வவுனியா மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றைய தினம் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், சில்லாலையை சேர்ந்த 36 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# டுபாயில் இருந்த குற்றவாளி இலங்கைக்கு

கொழும்பு, ஓக. 30

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று டுபாயில் இருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட கீத்[illegible] பெனோய் தொடர்பில் பொலிஸார் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபராக கருதப்படும் இவருக்கு எதிராக சர்வதேச பொலிஸார் சிவப்பு எச்சரிக்கையை பிறப்பித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# யாழ். நகரை அண்டிய பகுதிகளில் பொலிஸார் தீவிர கண்காணிப்பில்

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாண நகரை அண்டிய பகுதிகளான மத்திய பேருந்து நிலையம், கோட்டை மற்றும் பண்ணை கடற்கரை பகுதிகளைச் சூழவுள்ள பகுதிகளில் பொலிஸாரின் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த பகுதிகளில் சட்ட விரோத செயற்பாடுகள் , சமூக சீர்கேடான விடயங்கள் உள்ளிட்ட விரும்பத்தகாத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக யாழ் . மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த பகுதிகளில் திடீர் சுற்றுக்காவல் (ரோந்து) பணிகளை மேற்கொள்ளுமாறும் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறும் இதர பகுதிகளையும் கண்டறிந்து , இந்த செயற்பாடுகளை முழுமையாக கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு ஆளுநர் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eelanadu ஈழநாடு
30.08.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தேர்தல் வெற்றி...!

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவார் என்பதைக் கணிப்பது மிகவும் கடினமாக இருப்பதாகத் தெரிகின்றது - சதாரண மக்கள் மத்தியில் பலவாறான அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. இப்போது வரையில் ரணில் மூன்றாவது இடத்தில் இருப்பதான கணிப்பே மேலோங்கியிருக்கின்றது. அநுரகுமாரவுக்கும் சஜித்துக்குமே போட்டி நிலவுவதாகக் கூறப்படுகின்றது. தென்பகுதியிலிருந்து கிடைக்கும் தகவல்கள் அவ்வாறுதான் அமைந்திருக்கின்றன. ஆனால், களயதார்த்தத்தைக் கணிப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. சாதாரண மக்கள் பெரும்பாலும் இறுதி நாட்களில்தான் அவர்களின் முடிவை எடுப்பார்கள். அந்தச் சூழலில், எவ்வாறான நிலைமை இருக்கின்றதோ, அதனைக் கொண்டுதான் அவர்களின் தீர்மானம் அமையும்.

ஆனால், நிச்சயமாக பிரதான மூன்று பேர்களில் ஒருவர்தான் வெற்றிபெறப் போகின்றார் - அவர்களின் வெற்றிக்கான வியூகங்களும் அவை ஏற்படுத்தப் போகும் தாக்கங்களும்தான் ஒருவரின் இறுதி வெற்றியைத் தீர்மானிக்கும். பொதுவாக சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் பௌத்த சங்கங்களின் செல்வாக்கு மிகவும் பலமானது. பன்சலகளில் என்ன இறுதியாக போதிக்கப்படுகின்றதோ அதுதான் மக்களுக்கான செய்தி. கட்சிகள் எப்போதும் இரண்டாவதுதான். கட்சிகளுக்கான பாரம்பரிய வாக்கு வங்கி ஓரளவுதான் இறுதியில் செல்வாக்குச் செலுத்தும். அவற்றைக் கடந்து பௌத்த மனோநிலையே இறுதியில் வாக்காளர்களின் மனோநிலையைத் தீர்மானிக்கும்.

ஒப்பீட்டடிப்படையில் ரணில் பௌத்த மனோநிலைக்கு அதிகம் நெருக்கமானவராக இருந்ததில்லை. இதன் காரணமாகவே அவரிடம் ஆற்றல் இருந்தும் அவரால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வரமுடியவில்லை. அவர் பலமுறை முயற்சித்தபோதிலும்கூட, அவரால் ஆகக் குறைந்தது பல்வேறு சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி வேட்பாளராகக்கூட வரமுடியவில்லை. இவ்வாறானதொரு நிலையில் ஒரு விபத்தாகவே ஜனாதிபதி கதிரையில் அவர் அமர முடிந்தது. அதிலும் குறிப்பாக சஜித்தின் தலைமைத்துவ வறுமையின் காரணமாகவே ரணில் பதவியில் அமர்ந்தார்.

ஒரு நாடு பெரும் நெருக்கடிக்குள் சிக்குகின்றபோது, எதிர்கட்சித் தலைவர் நாட்டை பொறுப்பெடுக்க முன்வரவேண்டும். ஆனால், நாடு அதல பாதாளத்தில் வீழ்ந்தபோது - மக்கள் தலைமை இல்லாமல் இருந்தபோது சஜித்தோ வெறும் வார்த்தைகளில் காலத்தை விரயம் செய்து கொண்டிருந்தார். இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தைத்தான் ரணில் பயன்படுத்திக் கொண்டார். இங்கு கெட்டித்தனம் என்பது வெறும் அறிவாற்றல் - அனுபவம் சார்ந்தது மட்டுமல்ல, முக்கியமான தருணங்களில் துணிகரமான முடிவுகளை எடுக்கும் ஆற்றலோடு ஒருவர் இருக்க வேண்டியது கட்டாயமானது. சஜித்திடம் அது இருந்திருக்கவில்லை.

ஆனாலும், கிராமப்புற மக்கள் மத்தியில் ரணில் எவ்வாறு பார்க்கப்படுகின்றார் - ஏனையவர்கள் எவ்வாறு பார்க்கப்படுகிறார்கள் என்பதில்தான், இறுதி வெற்றியாளர் தீர்மானிக்கப்படுவார். கோட்டாபயவுக்கு 69 இலட்சம் மக்கள் வாக்களித்தது அவரின் பொருளாதாரக் கொள்கைக்காக அல்ல - மாறாக, சிங்கள மக்களின் பாதுகாப்பு அரணாக இருக்கக்கூடிய ஒருவர் என்னும் உணர்வுநிலைதான், கோட்டாபயவின் பக்கமாக மக்களைத் தள்ளியது. அவ்வாறானதொரு மனோநிலை இப்போது சிங்கள மக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

பொருளாதார பாதுகாப்பு ஒன்றுதான் இன்றைய நிலையில் மேலோங்கியிருப்பதாகத் தெரிகின்றது. இதனை சாதாரண மக்கள் புரிந்து கொண்டால், அவர்களின் தெரிவு ரணிலாகவே இருக்க வேண்டும். ஆனால், இந்த விடயத்தில் சிங்கள - பௌத்த மனோநிலையை பிரதிபலிக்கும் கட்டமைப்புகள் எவ்வாறு சிந்திக்கின்றன என்பதில்தான் தேர்தல் முடிவுகள் தங்கியிருக்கின்றன. தற்போதைய சூழலில் ரணில் தேவையென்று, சிங்கள - பௌத்த மகா சங்கங்கள், கட்டமைப்புகள் கருதுமானால் - அவைகள் நிச்சயம் ரணிலின் பக்கமாக மக்களைத் திருப்பவே முயற்சிக்கும் - ஒருவேளை ரணில் சிக்கல் என்று கருதினால் - அவர்களின் முடிவு வேறுவிதமாக அமையம். இறுதியில் சிங்கள - பௌத்த மனோநிலையே வெற்றியாளரை தீர்மானிக்கும். இதில், தமிழ் மக்களுக்கு எவ்வித இடமும் இல்லை. இதன் காரணமாகத்தான் தமிழ் பொது வேட்பாளர் தமிழ் மக்களுக்கான ஒரேயோரு தெரிவாக இருக்கின்றார்.

நல்லூரான் திருவடி - 21

# பழத்தோட்டத்தில் பன்றிகளை விரட்டிய யோகர்!

- டாக்டர் கு. நித்தியானந்தா



எனது மாமனாருக்கு இரத்தினபுரியில் ஒரு பழத்தோட்டமிருந்தது. அப்பழ மரங்கள் நல்ல பயனைத் தருபவையாக இருந்தபோதிலும் அத்தோட்டத்தினுள் அடிக்கடி காட்டுப்பன்றிகள் ஊடுருவி சேதங்களை ஏற்படுத்தி வந்தன. காட்டுப் பன்றிகளின் இத் தொல்லை பற்றி யோகரிடம் எனது மாமனார் வேலுப்பிள்ளை கூறினார். அச்சமயம் யோகர் எனது மாமனாரிடம், "ஏன் வேலுப்பிள்ளை, போ என்று சொன்னால் பன்றிகள் போய்விடும். கவலைப்படாதே", என்று கூறினார். அன்றிலிருந்து காட்டுப் பன்றிகள் அப்பழத் தோட்டப் பக்கம் வருவதே இல்லை.

சுவாமியின் அடியாரான ஒரு தம்பதியர் திருமணமாகி பத்து ஆண்டுகள் குழந்தைப் பேறின்றி இருந்தனர். அத்தம்பதியினர் ஒரு சிவராத்திரி நாளில் சுவாமியின் முன்பாக அமர்ந்து விரதமிருந்தனர். சுவாமிகள் அத்தம்பதியைப் பார்த்து, ஓர் ஆண்பால் பெயரை கூறினார். இதன் பின்னர், அத்தம்பதியினருக்கு ஓர் ஆண் குழந்தை கிடைத்தது.

புகையிரதத் திணைக்களத்தில் பணிபுரிந்த அன்பரொருவர் அப்புத்தளையில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவரின் அப்புத்தளை இல்லத்துக்கு சுவாமி சென்றிருந்தார். சுவாமியின் வருகையை அறிந்து, சுவாமிகளின் வேறுசில அடியார்களும் அந்த அன்பரின் இல்லத்துக்கு வந்திருந்தனர். குளிர் காலமாகையால் அம்முன்னிரவுப் பொழுதில் கம்பளிப் போர்வையைப் போர்த்தபடி அவர்கள் காணப்பட்டனர்.

ஆனால், யோகர் தம் மேலாடையால்கூட தம்மைப் போர்க்காதிருந்தார். அச்சமயம் அந்த இல்லத்தரசி வீட்டினுள்ளே சென்று கம்பளிப் போர்வையொன்றை எடுத்துவந்து சுவாமிகளிடம் கொடுத்தார். ஆனால், யோகரோ அப்போர்வையைத் தவிர்த்து விட்டார். தமக்கு வியர்ப்பதாகக் கூறி, நெற்றியிலிருந்து வழிந்த வியர்வையை கையால் துடைத்துக்கொண்டார்.

புகையிரத நிலைய சேவையில் பணியாற்றிய யோகரின் அந்த அடியவர் பொல்காவலைக்கு இடமாற்றலாகியிருந்தார். அங்கும் அவரின் இல்லத்துக்கு யோகர் ஒருநாள் எழுந்தருளினார்.

அப்போது, தமக்கு ஈரப்பலக்காய் சாப்பிட விருப்பமாக இருக்கின்றது என்று யோகர் கூறினார். இதனையடுத்து, தமது ஊழியரொருவரிடம் ஈரப்பலக்காய் வாங்கிவருமாறு அந்த அடியவர் கேட்டுக்கொண்டதையடுத்து அந்த ஊழியரும் பொல்காவலையில் சகல இடங்களிலும் ஈரப்பலாக்காயை தேடிய போதிலும் அவருக்கு அந்தப் பலாக்காய் கிடைக்கவில்லை.

அச்சமயம் பலாக்காய் காய்க்கின்ற பருவகாலமல்ல எனவும் அந்த ஊழியர் கூறினார். அப்போது அப்புகையிரத நிலைய அடியவர் சுவாமிக்கு விரும்பியதைக் கொடுக்கமுடியவில்லையே என்று கவலைப்பட்டார். அச்சமயம் அவரது வீட்டின் முன்பாக இருக்கின்ற வீதியூடாக ஒரு கிராமவாசி துவிச்சக்கர வண்டியொன்றில் பலாக்காயுடன் வந்து அந்த இல்லத்தவர்களிடம் பலாக்காய்களைக் கொடுத்துவிட்டுச் சென்றார். அதனை நன்றே சமைத்து சுவாமிக்குப் படைத்து அந்த இல்லத்தவர்கள் மகிழ்ந்தனர்.


காலியில் பணயாற்றிய காலத்தில் நீதிமன்ற வழக்கொன்றின்பொருட்டு யாழ்ப்பாணம் வரவேண்டியிருந்தது. யாழ்ப்பாணம் போகும்போதெல்லாம் சுவாமிகளையும் அவரின் குடில் ஆச்சிரமத்தில் சென்று தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அப்போது யோகர் என்னை நோக்கி, 'விடுகாலி' என்றதும், ஏதாவது தவறிழைத்து விட்டேனோ, அதனையறிந்துதான் சுவாமி என்னை அப்படியழைத்தாரோ என்று எண்ணினேன். எனக்கு ஏற்பட்ட அந்த மனக்கிலேசத்தை எனது நண்பரொருவரிடமும் கூறினேன்.

இதனைக் கேட்ட அந்த நண்பர் என்னைப் பார்த்து, " நீ தவறாக அதுபற்றி எண்ணுகிறாய்" என்று தெரிவித்து, உன்னை காலி நகரை விடுமாறு கூறியே யோகர் அப்படிக் கூறினார் என்று, சுவாமி கூறிய 'விடு காலி'க்கு விளக்கமளித்தார், அந்த நண்பர். இதனையடுத்து, ஒரு சில தினங்களில் காலி வைத்திய சாலையிலிருந்து எனக்கு இடமாற்றம் கிடைத்தது. இதன்மூலம், யோகரைப் போன்ற ஆன்மீக ஞானிகளின் உதட்டிலிருந்து உதிருகின்ற ஒவ்வொரு வார்த்தையும் அந்த அநுபூதிமான்களை முழுமையாக மனதில் நிறுத்துபவர்களை நெறிப்படுத்துவதைக் கண்டு மெய்மறந்தேன்.

**தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒகஸ்ட் - 30 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 14
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவாதசி

**மேடம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றிபெறும் நாள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். நன்மை நடக்கும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலைகளையும் முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். அலைக் கழிக்கப்படுவீர்கள். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**கடகம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். முன்கோபத்தால் பகை உண்டாகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**சிம்மம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**கன்னி**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**துலாம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பும் அனைத்தும் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழிலில் லாபம் பெருகும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**தனுசு**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார். தொட்டது துலங்கும் நாள்.

**கும்பம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர் கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மீனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். நல்லன நடக்கும்.

# காணாமலாக்கப்பட்டோர் பட்டியலை இலங்கை அரசு வெளியிட வேண்டும்!

## இதனை வலியுறுத்துமாறு மத்திய அரசாங்கத்தை கோருகிறது வி. சி. க.

சென்னை, ஒக. 30

ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் பட்டியலை இலங்கை அரசாங்கம் வெளியிட மத்திய அரசாங்கம் வலியுறுத்த வேண்டும் - என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

சென்னையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தலைமையில் கட்சியின் உயர்நிலைக்குழு கூட்டம் நடைபெற்றது. இதிலேயே மேற்குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

மேலும், மது மற்றும் போதைப் பொருள் ஒழிப்புக்கான தேசிய கொள்கையை மத்திய அரசு உருவாக்க வேண்டும். தமிழகத்தில் மதுக்கடைகளை நிரந்தரமாக மூடுவதற்கு தமிழக அரசு கால நிர்ணயம் செய்து அறிவிக்க வேண்டும்.

இலங்கை கடற்படையால் தாக்குதலுக்கு ஆளாகும் தமிழக மீனவர்களை பாதுகாக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் வலியுறுத்தப்பட்டன. (ஐ)

# தி. மு. கவின் ஜெகத்ரட்சகனுக்கு 908 கோடி ரூபாய் அபராதம்!

சென்னை, ஒக. 30

சட்டவிரோத பணப் பரிமாற்றம் தொடர்பாக அரக்கோணம் தொகுதி தி. மு. கவின் எம். பி. ஜெகத்ரட்சகனுக்கு சட்ட அமுலாக்கத் துறை 908 கோடி (இந்திய) ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

இதுதொடர்பாக அமுலாக்கத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

தி. மு. க. எம். பி. ஜெகத்ரட்சகன், அவரின் குடும்பத்தினர் தொடர்புடைய இடங்களில் கடந்த 2020ஆம் ஆண்டு சோதனை நடைபெற்றது. இதில், ஜெகத்ரட்சகனுக்கு சொந்தமான ரூ. 89.19 கோடி சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதன்பிறகு, நீதிமன்ற உத்தரவால் கடந்த 2021 பெப்ரவரியில் பறிமுதல் உத்தரவு இரத்து செய்யப்பட்டது.

இதையடுத்து, நீதிமன்றத்தில் அமுலாக்கத் துறை மேல் முறையீடு செய்தது. இதில், ஜெகத்ரட்சகன் குடும்பத்தினரின் முதலீடுகள் தொடர்பில் விசாரிக்கப்பட்டன. தொடர்ந்து, ஜெகத்ரட்சகனின் சொத்துகளை பறிமுதல் செய்ய நீதிமன்று உத்தரவிட்டது.

இதையடுத்து, அவரின் 89.19 கோடி ரூபாய் சொத்துகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. அத்துடன், விதிமீறல்களுக்காக 908 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

# விஜய் கட்சியின் மாநாடு செப். 23 விக்கிரவாண்டியில்!

விழுப்புரம், ஒக. 30

தமிழக வெற்றிக் கழக முதல் மாநாட்டை விக்கிரவாண்டியில் நடத்த நடிகர் விஜய் முடிவு செய்துள்ளார். இதையடுத்து, வரும் செப். 23ஆம் திகதி மாநாடு நடத்த அனுமதி கோரி பொலிஸாரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

2026 சட்டப் பேரவை தேர்தலை இலக்கு வைத்து தமிழக வெற்றிக்கழகம் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், கட்சியின் முதல் மாநாட்டை திருச்சியில் நடத்த முடிவெடுக்கப்பட்டது. ஆனால், இடம் கிடைக்காததால் கைவிடப்பட்டது.

இந்தநிலையில், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் தனியாருக்கு சொந்தமான 85 ஏக்கர் இடத்தில் கட்சி மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் சுமார் 3 இலட்சம் பேர் பங்கேற்பர் என்று கருதப்படுகின்றது.

கட்சியின் மாநாடு தொடர்பான உத்தியோகபூர்வ தகவல்களை விஜய் விரைவில் அறிவிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 2026 சட்ட சபை தேர்தலுக்கு பிரசாரத்தை ஆரம்பியுங்கள்

## கட்சியினரிடம் கூறினார் உதயநிதி



சென்னை, ஒக. 30

"2026ஆம் ஆண்டு சட்ட சபை தேர்தலுக்கு, தி. மு. கவினர் இப்போதே பிரசாரத்தை தொடக்க வேண்டும்," என, அமைச்சர் உதயநிதி பேசினார்.

நிகழ்வு ஒன்றில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,

திராவிட மொடல் அரசு, எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நீங்கள் அனைவரும் தி.மு.க., ஆட்சியின் திட்டங்கள் அனைத்தையும் மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு, இன்னும் இரண்டு ஆண்டுகள்தான் உள்ளன. எனவே, இப்போதே தேர்தல் பிரசாரத்தை, தி.மு.கவினர் தொடக்க வேண்டும். மீண்டும் முதல்வர் ஸ்டாலின் தலைமையில், தி.மு.க. ஆட்சி அமைய உறுதியேற்போம் - என்றார். (ஐ)

# எய்ம்ஸ் மருத்துவமனை எப்போது கட்டி முடிக்கப்படும்?

## அரசிடம் கேள்வி எழுப்பியது உயர்நீதிமன்றம்

மதுரை, ஒக. 30

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை எப்போது கட்டி முடிக்கப்படும்? என மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை கேள்வி எழுப்பியிருக்கிறது.

கொரோனா பொதுமுடக்கக் காலத்தால், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை அமைவதில் காலதாமதம் ஏற்பட்டதாக மத்திய அரசு சார்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தை நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது.

இந்த மனு இன்று விசாரணைக்கு வந்த போது, மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை எப்போது கட்டி முடிக்கப்படும் என நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. மதுரையில் எய்ம்ஸ் அமையும் என அறிவிப்பு வெளியாகி 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. கடந்த 5 ஆண்டுகளாக என்ன செய்தீர்கள்? எப்போது கட்டி முடிப்பீர்கள்? என சரமாரியாகக் கேள்வி எழுப்பியது.

2026ஆம் ஆண்டுக்குள் மருத்துவமனை கட்டி முடிக்கப்படும் என்றும் இதற்கான கேள்விகோரல்கள் முடிந்துவிட்டன எனவும் மத்திய அரசு பதிலளித்தது. இதையடுத்து விரிவான அறிக்கையை சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதிமன்று வழக்கை ஒத்திவைத்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணத்தில் மட்டும் 4,676 டெங்கு நோயாளர்கள்

## நாடு முழுக்க 36,086 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக. 30

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் மட்டும் 4676 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதன்படி, நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 36,086 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 14,884 ஆகும்.

இந்நிலையில், கொழும்பு மாவட்டத்திலிருந்து 8,838 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும், வட மாகாணத்திலிருந்து 4,676 டெங்கு நோயாளர்களும், மத்திய மாகாணத்திலிருந்து 3,630 டெங்கு நோயாளர்களும், வடமேல் மாகாணத்திலிருந்து 2,415 டெங்கு நோயாளர்களும், தென் மாகாணத்திலிருந்து 2,633 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (அ)

# யாழில் தொடர் காய்ச்சலால் குடும்பப் பெண் உயிரிழப்பு !

யாழ்ப்பாணம், ஒக. 30

யாழ்ப்பாணத்தில், 20 நாட்கள் தொடர் காய்ச்சல் காரணமாக குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன் தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

நாரந்தனை மத்தி, ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய ஏழு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்துள்ளார்.

இவர் கிளிநொச்சியில் மகள் வீட்டில் இருந்தவேளை கடந்த 7ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதால் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இருப்பினும் இடையிடையே காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

பின்னர் 17ஆம் திகதி ஊர்காவற்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். அதன் பின்னரும் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் 19 ஆம் திகதி ஊர்காவற்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் 27ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளதோடு, உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

# கடலுக்கு செல்வதை தவிர்க்குக!

கொழும்பு, ஒக. 30

வடக்கு வங்காள விரிகுடா கடற்பிராந்தியத்திற்கு செல்வதை எதிர்வரும் 2 நாட்களுக்கு தவிர்க்குமாறு மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பலத்த மழை, கடும் காற்று மற்றும் கடல் சீற்றம் தொடர்பில் எச்சரிக்கை அறிக்கையை வெளியிட்டு வளிமண்டலவியல் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

அதற்கமைய இன்று வங்காள விரிகுடாவை அண்மித்த வளிமண்டலத்தில் காற்றழுத்த தாழ்வுநிலை அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த கடற்பிராந்தியத்தில் பலத்த மழை பெய்வதுடன், மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோ மீற்றர் வரையான கடும் காற்று வீசக்கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# குற்றம்சாட்டப்பட்ட சட்டத்தரணி நீதிமன்றத்தில் மயங்கி விழுந்தார்

கொழும்பு, ஒக. 30

உயர் நீதிமன்றத்தை அவமதிக்கும் விதமாக வாக்குமூலங்களை சமர்ப்பித்ததன் காரணமாக சட்டத்தரணியாக கடமையாற்றுவதில் இருந்து இடைநிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள டபிள்யூ.டி. தர்மசிறி கருணாரத்ன, தனக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நேற்று முன் தினம் உயர் நீதிமன்றத்தில் மயங்கி விழுந்தார்.

மேல்முறையீட்டு நீதிமன்ற ஆவணக் காப்பகத்திற்குள் நுழைந்து, அனுமதியின்றி வழக்குப் பதிவை எடுத்து, ஆவணத்தை அழித்ததற்காக, சட்டத்தரணி தொழிலின் நெறிமுறைகளை மீறியதற்காக, அவர் மீதான வழக்கு, உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அவரை சிறை அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

தொழில்முறை நெறிமுறைகளை மீறியதாக புகார் அளிக்கப்பட்டபோது, நீதிபதிகள் முன் நின்றுகொண்டிருந்த அவர், உரத்த குரலில் கத்திக் கொண்டே மயங்கி விழுந்தார். அப்போது சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் வந்து சக்கர நாற்காலியில் ஏற்றி அழைத்துச் சென்றனர்.

இந்த மனுவை ஒக்ரோபர் 30ஆம் திகதி விசாரிக்கும் நீதிபதிகள், அதுவரை அவரை காவலில் வைக்க உத்தரவிட்டனர்.

# உரிய வேளையில் கட்டணத்தை செலுத்த தவறின் மின் துண்டிப்பு

கொழும்பு, ஒக. 30

மின்சார பாவனைக்கான மாதாந்த மின்பட்டியல் கட்டண விவரம் பாவனையாளர்களின் கையடக்க தொலைபேசிக்கு எஸ்.எம்.எஸ். மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்நிலையில் 30 நாட்களின் பின் மின் கட்டணம் செலுத்த தவறும் பட்சத்தில் பட்டியல் நிலுவைக்காக 1.5 சதவீத வட்டி பட்டியலில் பற்று வைக்கப்படும். இது தொடர்பாக பாவனையாளர்களுக்கு குறுந்தகவல் மூலம் உடனுக்குடன் அனுப்பப்படுமென பிரதம மின்சார பொறியியலாளர் தெரிவித்தார்.

இந்நிலையில் மின்சார பட்டியல் கிடைத்து 30 நாட்களின் பின்னர் 10 நாள் காலக்கெடு வழங்கிய பின்னரும் கூட உரிய நேரத்தில் மின்சார கட்டணத்தை செலுத்த தவறினால் அதன் பின்னர் மின்சார துண்டிப்பு இடம்பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மின்சார பாவனையாளர்களின் மாதாந்த கட்டண அறவீடு மின்சார சபையின் சட்டதிட்டத்துக்கமையவே மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார். (அ)

# 36 வயதுப் பெண் கொடூர கொலை

கொழும்பு, ஒக. 30

ஹொரணை பிரதேசத்தில் 3 பிள்ளைகளின் தாய் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரதீபிகா குமாரி என்ற 36 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமை காரணமாக இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அயல் வீட்டிலுள்ள நபர் ஒருவர் தனது சகோதரனுடன், குறித்த பெண்ணை சந்திப்பதற்காக கத்தியுடன் சென்றுள்ளார்.

திடீரென அந்த நபர், குறித்த பெண்ணை கொடூரமாக வெட்டி கொலை செய்துள்ளார்.

இந்த நிலையில் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ள நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் அடிக்கடி வாக்குவாதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரின் மனைவி இன்னொருவருடன் சென்று வாழ்ந்து வரும் நிலையில், அதற்கு கொலை செய்யப்பட்ட பெண் உதவியதாக, சந்தேக நபர் குற்றம் சாட்டியுள்ளார்.

அதற்கு பழிவாங்கும் நோக்கிலேயே குறித்த பெண்ணை கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# உக்கிளாங்குளம் பகுதியில் விபத்து நிறுத்தாமல் சென்ற காரால் பதற்றம்

## கார் சாரதி பொலிஸாரிடம் ஒப்படைப்பு

வவுனியா, ஒக. 30

வவுனியா நகரில் தொடர் விபத்துக்களை ஏற்படுத்திய சாரதி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நகரில் ஆபத்தான வகையில் காரைச் செலுத்தி தொடர்ச்சியான விபத்துக்களை ஏற்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் சாரதி பிரதேச இளைஞர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் பதிவாகியுள்ளது.

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இருந்து காரை செலுத்தி வந்த இளைஞர் ஒருவர், உக்கிளாங்குளம் பகுதியில் விபத்தினை ஏற்படுத்திவிட்டு நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளார்.

இதன் போது வைரவ புளியங்குளம் மற்றும் நகரப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த சில வாகனங்களுடன் மோதி விபத்தினை ஏற்படுத்தியுள்ளார்.


இதனையடுத்து குறித்த காரை இளைஞர்கள் சிலர் விரட்டிச் சென்றுள்ளனர்.

அதிவேகமாக பயணித்த கார் பூந்தோட்டம், பெரியார் குளம் பகுதியில் வீதியின் கரையில் இருந்த மின்சார கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந் நிலையில் காரின் சாரதியை மடக்கிப் பிடித்த இளைஞர்கள், அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# கடவுச்சீட்டு விநியோக விடயத்தில் மன்னிப்பு கோருகிறார் அலி சப்ரி



கொழும்பு, ஒக. 30

கடவுச்சீட்டு விநியோக விடயத்தில் அரசாங்கம் இன்னும் கிரமமாக செயற்பட்டிருக்க வேண்டும் எனவும், அதற்காக மன்னிப்பு கோருவதாகவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

வெற்றுக் கடவுச்சீட்டுகளின் பற்றாக்குறையால் புதிய கடவுச்சீட்டு விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் பல நாட்களாக பொது மக்கள் கடவுச்சீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக காத்திருக்கின்றனர்.

பொதுமக்கள் இவ்வாறு அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளமை கவலையளிப்பதாகவும், அரசாங்கம் இந்த விடயத்தில் இன்னும் கிரமமாக செயற்பட்டிருக்க வேண்டும் என்பதை ஏற்றும் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொள்வனவு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள வெற்றுக் கடவுச்சீட்டு புத்தகங்கள் ஒக்ரோபர் 16ஆம் திகதி கிடைக்கப்பெறும் எனவும் அதுவரை யில் இந்த சூழ்நிலை தொடரும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். (அ)

# முன்னாள் காதலியின் நிர்வாணப் படங்களை வெளியிடப்போவதாக மிரட்டியவருக்கு மறியல்!

கொழும்பு, ஒக. 30

பணம் கொடுக்காவிட்டால், யுவதி ஒருவரின் நிர்வாண புகைப்படங்களை இணையத்தில் விநியோகிப்பதாக அச்சுறுத்திய குற்றச்சாட்டின் பேரில், அக்குறணையைச் சேர்ந்த இளைஞரை செப்ரெம்பர் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

விசாரணையில், சந்தேக நபருக்கும், யுவதிக்கும் பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் மூலம் சிறிது காலம் காதல் இருந்தமை தெரியவந்தது. உறவு முறிந்த பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர் யுவதியிடமிருந்து பணம் பறிக்க புகைப்படங்களைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

சம்பவத்தின் உண்மைகளை கருத்திற்கொண்ட நீதவான் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க தீர்மானித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழையான தீர்மானம் எடுத்தால் பங்களாதேஷ் நிலையே எமக்கும்!

## அகிலவிராஜ் காரியவசம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 30

**மக்கள் பிழையான தீர்மானம் எடுத்தால் பங்களாதேஷிற்கு ஏற்பட்டுள்ள நிலையே எமக்கும் ஏற்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னதாக கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தால் நாடு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என நாங்கள் அன்று மக்களுக்கு தெளிவுபடுத்தினோம். என்றாலும் மக்கள் எங்களை நம்பாததால் பாரிய நெருக்கடிக்கு எங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

அதேபோன்று தற்போதும் ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு யாருக்கு வாக்களித்தாலும் மீண்டும் சில மாதங்களில் நாட்டை கட்டியெழுப்ப ரணில் விக்ரமசிங்கவுக்கே முன்வர வேண்டி வரும்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பு முடியுமான தலைவரை தெரிவு செய்வதா? அல்லது புதிய ஒருவரை தெரிவுசெய்து பரீட்சித்துப் பார்ப்பதா? என்பது மக்களின் தீர்மானத்திலேயே உள்ளது.

ஏற்கனவே கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கும் போது, நாடு நெருக்கடி நிலைக்கு தள்ளப்படும் என நாங்கள் மக்களுக்கு தெளிவுபடுத்தியதாகவும், ஆனால் மக்கள் அன்று



எங்களை நம்பவில்லை.

அதேபோன்றே எதிர்வரும் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை தவிர வேறு யாருக்கு வாக்களித்தாலும் நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு தள்ளப்படுவதில் எந்த சந்தேகமும் இல்லை.

அதனால் மக்கள் இந்த தேர்தலை விளையாட்டாக கருதாமல் சரியான தீர்மானம் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், அவ்வாறு இல்லாவிட்டால், பொருளாதாரத்தில் நல்ல நிலையில் இருந்த பங்களாதேஷிற்கு ஏற்பட்டுள்ள நிலையே எமது நாட்டுக்கும் ஏற்படும்-என்றார்.

(அ)

# உழைக்கும்போது செலுத்தும் வரியை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை!

## கூறுகிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஓக. 30

மக்களுக்கு பாரிய பிரச்னையாக உள்ள உழைக்கும் போது செலுத்தும் வரியை மீளாய்வு செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், அது தொடர்பில் கலந்துரையாடி மக்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

எஹலியகொட புதிய சந்தைக்கு அருகில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி,



பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் நாம் அனைவரும் வாழ்வதற்கு ஒரு நாடு எஞ்சியிருக்காது எனவும் வலியுறுத்தினார்.

வரியையும் குறைத்து, மக்களின் வாழ்க்கைச் சுமையையும் குறைப்பதாக சாத்தியமில்லாத வாக்குறுதிகளை சஜித் பிரேமதாசவும், அனுரகுமார திஸாநாயக்கவும் மக்களுக்கு வழங்குவதாக அவர் சுட்டிக்காட்டினார். அவர்கள் கூறும் பாதையில் சென்றால் எரிவாயு, எரிபொருள் மற்றும் மருந்து இல்லாத பாதைக்கே மக்கள் பயணிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

(அ)

# அரசியல் பழிவாங்கல்களுக்கு எங்கள் ஆட்சியில் இடமில்லை

## அநுரகுமார கூறுகிறார்



கொழும்பு, ஓக. 30

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அரசியல் பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், மக்களின் பணத்தினை கொள்ளையடித்தவர்கள் நிச்சயமாக சட்டத்தின் முன்னிறுத்தப்படுவார்கள் என கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டை வீழ்ச்சியில் இருந்து கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் ஒரு போது ஊழல்வாதிகளை இணைத்துக் கொள்ளப் போவதில்லை எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செப்ரெம்பர் 21 தேர்தலன்று யாரை தெரிவு செய்யவேண்டும் என்பதை மக்கள் தீர்மானித்து விட்டார்கள் என்பது இப்போது தெளிவாக தெரிகின்றது.

தேசிய மக்கள் சக்தியின் வேலைத்திட்டங்களில் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். எனவே செப்டெம்பர் 21 ஆம் திகதியன்று நாம் அமோக வெற்றியீட்டி நாட்டின் ஊழல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

தூய்மையான அரசியல் கலாசாரத்தினை ஏற்படுத்துவோம். வரலாற்றில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும். அதாவது தேர்தல் நெருங்கிவரும் வரை மக்கள் எதிர்ப்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

22 ஆம் திகதியில் இருந்து இந்த நாட்டில் கட்சி இன மத வேறுபாடின்றி மக்களை ஒன்றிணைத்து புதிய ஆட்சி அமைப்போம். இந்த நாட்டுக்கு புதிய அரசியல் கலாசாரம் ஒன்றே தேவைப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாது. ஆனால் ஊழல் வாதிகளை சட்டத்தின் முன்னிறுத்துவோம்.

மக்களின் பணத்தினை கொள்ளையடித்தவர்கள் நிச்சயமாக சட்டத்தின் முன்னிறுத்தப்படுவார்கள். நாம் நாட்டை வீழ்ச்சியில் இருந்து கட்டியெழுப்புவோம்.

நாம் மக்களுடனேயே ஒன்றிணைந்து செயற்படுவோம். மக்களின் பணத்தினை கொள்ளையிட்டு மக்களை வறுமைப் பிடியில் சிக்க வைத்தவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும்-என்றார்.

(அ)

# தமிழ் பொதுவேட்பாளர் முயற்சியால் சுயாட்சி கோரிக்கை பலவீனப்படும்!

## எச்சரிக்கிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, ஓக. 30

தமிழ் பொதுவேட்பாளர் முயற்சியால் தமிழர்களின் சுயாட்சிக் கோரிகையே பலவீனமடையப்போகின்றது எனவும், தமிழ் பொதுவேட்பாளரை களமிறங்கிய தரப்புகள் கூட சஜித்துக்கே வாக்களிப்பார்கள் எனவும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு திரட்டி நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் முடிவெடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு எப்போதும் காலம் எடுக்கும். அவர்கள் கனக்க யோசிக்கும் ஆட்கள். பரவாயில்லை நேரமெடுத்து யோசித்து முடிவெடுங்கள் என அவர்களை விட்டுள்ளோம்.

இதற்கிடையில் ஒரு சிலர் தனித்து சென்று தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கியுள்ளனர். எதற்கு தனி வேட்பாளர் என பொதுவேட்பாளர் தரப்பினரிடம் கேட்டேன். சிலர் விடுவம்பு காரர்கள், அதனால்தான் போட வேண்டியேற்பட்டது என பதிலளித்தனர்.

ஆனால் நாங்களும் சஜித்துடன் தான் நிற்போம் என அவர்கள் என்னிடம் கூறினர். பெரும் தலைவர்கள்தான் இதனைக் குறிப்பிட்டனர். நான் பெயர் சொல்லவிரும்பவில்லை.

நண்பர் அரியநேத்திரனுக்கு என்ன நடக்கப்போகின்றது என்பதை பார்க்கத்தான் போகின்றீர்கள். இதன்மூலம் தமிழர்களின் சுயாட்சிக் கோரிக்கை பலவீனமடையும். எனவே, இந்த விடயத்தில் தமிழ் மக்கள் பங்காளியாகிவிடக்கூடாது.

தேசிய தலைவர்கள் உங்களின் காலடிக்கு வரும் சந்தர்ப்பம்தான் ஜனாதிபதி தேர்தல். எனவே, அந்த வாய்ப்பை சரிவர பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சஜித் பிரேமதாச என்பவர் இனவாதமற்ற தலைவர்- என்றார்.

(அ)

# தமிழ்த் தலைமைகளிடம் உறுதியான நிலை இல்லை

யாழ்ப்பாணம், ஓக. 30

உறுதியான நிலைப்பாடும் ஒருமித்த கருத்தும் இல்லாத தலைமையால் தமிழ் மக்களுக்கு சரியான அரசியல் வழிநடத்தலை காண்பிக்க முடியுமா? என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறீ ரங்கேஸ்வரன் கேள்வியெழுப்பியுள்ளார்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் சந்தர்ப்பவாதிகளாக கட்டமைப்பை உருவாக்குவதாக கூறியவர்களில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

இது அரசியல் இலக்கற்ற சந்தர்ப்பவாத செயற்பாடு என ஏற்கனவே நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். அது இப்போது நடைமுறையில் அரங்கேறிவருகின்றது

இவ்வாறான செயற்பாடுகளை தமிழ் மக்கள் உன்னிப்பாக அவதானித்துக்கொள்ள வேண்டும். பொதுக்கட்டமைப்பு என கூறிக்கொண்டவர்களில் ரெலோ அமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளார்.

இது தேர்தல் பித்தலாட்டமாகவே காணமுடிகின்றது-என்றார்.

(அ)

# ரணிலின் பிரசார மேடையில் மகிந்தவைப் புகழ்ந்த எம்.பி.!

கொழும்பு, ஓக. 30

பொதுஜன பெரமுனவிலிருந்து பல்டியடித்து, ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மேடையில் ரணிலுக்கு பதிலாக மகிந்தவின் பெயரை உச்சரித்த சுவாரஷ்யமான சம்பவம் நடந்துள்ளது.

துக்கத்தில் இருந்து மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திய தலைவர் மகிந்த ராஜபக்ஷ என கூறிய அவர், உடனடியாக அதை கரித்துக் கொண்டு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என திருத்திக் கொண்டார்.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திருபதி ரஜிகா விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

மாவனெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றின் இந்த சம்பவம் நடந்தது.

பொதுஜன பெரமுனவில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவான அவர், இந்த ஜனாதிபதி தேர்தலில். ரணில் விக்கிரமசிங்கவின் பக்கம் பல்டியடித்துள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையை போக்க புதிய நடவடிக்கைகள்

## சஜித் பிரேமதாஸ உறுதிமொழி

கொழும்பு, ஓக. 30

**தமது ஆட்சியில், வறுமையை போக்குவதற்கான புதிய நடவடிக்கைகளை முன்னெடுத்து, நிவாரணங்கள் வழங்கும் யுகத்தை நிறைவு செய்வோம் என வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**



விவசாயிகளுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி, வறுமையை போக்குவதற்கான புதிய நடவடிக்கைகள் முன்னெடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த 23 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி நேற்று வெள்ளவாய நகரில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரபஞ்சம் மூச்சு போன்ற வேலை திட்டங்களின் ஊடாக ஒரு பில்லியன் பெறுமதியான வேலைகளை செய்திருப்பதோடு, 76 வருட கால ஜனநாயக காலத்திற்குள் எதிர்க்கட்சி ஒன்று இவ்வாறான பாரிய சேவைகளை செய்யவில்லை.

இப்படியான சூழ்நிலைக்கு மத்தியில் தாம் முன்வைக்கின்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியுமா என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். 76 வருட ஜனநாயக காலத்திற்குள் இவ்வாறான பாரிய சேவைகளை எந்த அதிகாரமும் இல்லாமல் நாம் செய்திருக்கிறோம்.

அத்தோடு சமூர்த்தி, ஜனசவிய, அஸ்வெசும போன்ற வறுமையை ஒழிக்கும் வேலைத் திட்டங்களில் காணப்படுகின்ற சிறந்த விடயங்களை உள்ளடக்கிய புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கபடும்.

வறுமையான குடும்பங்களுக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கி 24 மாதங்களுக்குள் வறுமையை முற்றாக ஒழிப்போம். தொடர்ந்தும் நிவாரணங்களை வழங்கும் யுகத்தை நிறைவு செய்ய வேண்டும்-என்றார். (அ)



# பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு கிளிநொச்சியில் ஆதரவுக் கூட்டங்கள்

கிளிநொச்சி, ஓக. 30

ஜனாதிபதி தேர்தலில் ஈழத் தமிழ் மக்களை பிரநிதித்துவப் படுத்தி போட்டியிடவுள்ள பா. அரியநேத்திரனுக்கு தற்போது ஆதரவு அதிகரித்து வருகின்றது.

அதன்படி, நேற்று கிளிநொச்சி இராமநாதபுரம், சின்னச்சந்தை பிரதேசத்திற்கு சென்ற தமிழ்ப் பொது வேட்பாளருக்கு பொது மக்களால் ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கின் சிவில் அமைப்புகளினால் முன்வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளரான பா. அரியநேத்திரன் சங்குச் சின்னத்தில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

இந்நிலையில், தற்போது அவர் தேர்தல் பிரச்சாங்களை ஆரம்பித்துள்ளார்.

எதிர்வரும் சில தினங்களில் கிழக்கிலும் தேர்தல் பிரசாரங்களை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சியில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு கூட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. (அ)

# நிறுத்தப்பட்ட யாழ் தேவி மீண்டும் ஓடச் செய்வேன்!

## நாமல் ராஜபக்ஷ உறுதி

கொழும்பு, ஓக. 30

தற்போதைய நிர்வாகத்தின் கீழ் செயற்திறன் இன்மை காரணமாக பல மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ள யாழ் தேவி ரயில் சேவைகளை மீள ஆரம்பிப்பதாக உறுதியளிப்பதாக பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

30 வருட கால யுத்தத்தை முடித்துக் கொண்டு எமது அரசாங்கம் வடமாகாணத்திற்கான யாழ் தேவி றயில் பாதைகளை வெற்றிகரமாக நிறுவியது.

எனினும் தற்போதைய நிர்வாகத்தின் செயற்திறன் இன்மையினால் இந்த சேவைகள் பல மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்திற்கான ரயில் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு தமது அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

மேலும் மாத்தறை முதல் கதிர்காமம் வரையிலான 114 கிலோமீற்றர் நீளமான ரயில் பாதையை தாமதமின்றி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுப்போம் -என்றார். (அ)

# பல்வேறு கட்சிகளை இணைத்து 5ஆம் திகதி புதிய கூட்டணி உதயம்

கொழும்பு, ஓக. 30

எதிர்வரும் செப்ரெம்பர் 05ஆம் திகதி புதிய கூட்டணி அறிமுகப்படுத்தப்படுமென இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

“நாட்டிற்காக இயங்கக்கூடிய பல்வேறு கட்சிகளை இணைத்துக்கொண்டு, புதிய கூட்டணி அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனடிப்படையில், எதிர்வரும் 05ஆம் திகதி புதிய கூட்டணி அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

எல்பிட்டிய பிரதேச சபைக்கான வேட்புமனுவை புதிய



கூட்டணியின் சார்பாகவே தாக்கல் செய்வோம்.

நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்லக்கூடிய தூர நோக்குடைய சிந்தனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே உண்டு.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்தாலும் அது, நடைமுறைக்கு சாத்தியமற்றது.

நாட்டை பொருளாதார ரீதியாக வலுவடையச்செய்யும் விடயங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொய் சொல்லும் தலைவர் அல்லர்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஓக. 30

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு ஒளிமயமான நாளை உருவாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணிக்கும் இந்த கடினமான பொருளாதார பாதையில் இன்னும் கொஞ்சம் தூரத்திற்கு செல்ல வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பொருளாதாரப் போக்கை மாற்றினால், கடந்த காலத்தை விட அதிக சிரமங்களை நாம் சந்திக்க நேரிடும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

உடுகம்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது-

எமது நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு ஜனாதிபதி பகிரங்க அழைப்பு விடுத்தார். இருவருமே கதைப்பதில் வல்லவர்கள். எனவே குதித்து இந்த சவாலை ஏற்றுக்கொள்வார்கள் என்று நாங்கள் நினைத்தோம்.

எதிர்க்கட்சித் தலைவர் மிகவும் யோசித்து அந்த சவாலை ஏற்றுக்கொண்டுள்ளார்.



ஆனால் அவர் ஜனாதிபதி வேட் பாளராக இந்த விவாதத்திற்கு வருவாரா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஒவ்வொரு முச்சந்தியிலும் நடைபாதையிலும் உண்மை விளம்பியபடி இருக்கும் அனுர குமார திஸாநாயக்க விடமிருந்து இன்னும் எந்த சலனமும் இல்லை. நமக்குத் தெரிந்த பழைய ஜே.வி.பி ஆட்கள் இப்படி இல்லை. ஒரு சவால் வரும் போது ஓடி வந்து அதை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் இப்போதைய ஜே.வி.பி. ஆட்களுக்கு அவ்வளவு துணிச்சலான முதுகெலும்பு இல்லை, அவர்களால் தற்பெருமை காட்டத் தான் முடியும்.

சஜித், அனுர போன்றவர்களின் பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் போது சாமானிய மக்களுக்கு சாப்பிடக் கூட நேரமில்லாமல் போகும். அவை இவ்வுலகில் நடைமுறைப்படுத்தக் கூடிய கொள்கைகள் அல்ல. அனுரவும் சஜித்தும் பழைய ஆட்கள்.

அதனால்தான் அநுரவின் அரசாங்கத்தின் நிதியமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி எலோன் மாஸ்க்கை போன்ற பொருளாதாரக் கொலையாளி என அழைக்கப்படுகிறார். உலகமே தெரியாத இந்த மாதிரி ஆட்களை வைத்து எப்படி நாட்டை கட்டியெழுப்ப முடியும்? ஒரு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது எப்படி?

உலகம் இப்போது நவீனமயமாக உள்ளது, எனவே பழைய உலகத்திற்கு ஏற்றவாறு திட்டங்களை உருவாக்குவது பயனற்றது. எந்நேரமும் பொய் சொல்லி மக்களை ஏமாற்றலாம் என எதிர்க்கட்சிகள் நினைக்கின்றன. இம்முறை தேர்தல் முடிவுகளில் அவர்கள் எவ்வளவு பின்தங்கியிருக்கிறார்கள் என்பதை பார்க்க முடியும்.

ஜே.வி.பி 88/89 காலப் பகுதியில் பேருந்துகள் எரிக்கப்பட்டன, மின்மாற்றிகள் எரிக்கப்பட்டன, வங்கிகள் உடைக்கப்பட்டு அரசாங்க சொத்துக்கள் அழிக்கப்பட்டன. நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டிய பணத்தில் அவற்றை மீளக் கட்டியெழுப்ப செலவு செய்ய வேண்டியிருந்தது. எனவே, இந்த பொருளாதார நெருக்கடியில் ஜே.வி.பி.யும் பங்கு வகிக்கிறது. 75 ஆண்டுகால சாபம் பற்றி பேசும் ஜே.வி.பி, அது ஏற்படுத்திய பொருளாதார அழிவு பற்றி பேசவே இல்லை. எது சரி எது தவறு என்பதை எதிர்த்து நிற்க உங்களுக்கு வலுவான முதுகெலும்பு இருக்க வேண்டும். ஜே.வி.பிக்கோ அல்லது சஜித்துக்கோ அத்தகைய முதுகெலும்பு இல்லை-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மு. காவின் உயர் பீடத்திலிருந்து

# ஹரீஸை இடைநிறுத்தும் தீர்மானம் திடீர் வாபஸ்!



மருதமுனை, ஓக. 30

**சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர் பீடத்தில் இருந்து அந்தக் கட்சியின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸை இடைநிறுத்தும் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் அறிவித்துள்ளார்.**

இதன் பிரகாரம் ஹரீஸ் எம். பி. மீண்டும் கட்சியின் பிரதித் தலைவராக செயல்படுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் விசேட உச்ச பீடக் கூட்டம் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் புதன்கிழமை மாலை அம்பாறை, மருதமுனையிலுள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

கட்சியின் உயர்பீட அங்கத்துவத்தை இடைநிறுத்தி அனுப்பப்பட்ட கடிதத்துக்கு ஹரீஸ் எம். பி. சத்தியக் கடதாசி மூலமாக தலைவருக்கு அனுப்பியிருந்த பதில் இதன்போது ஆராயப்பட்டது.

அதில் அவர் மிகத் தெளிவாக கூறியுள்ள விடயம் யாதெனில், தான் 2024. 08. 04 ஆம் திகதி கூடி கட்சி உச்ச பீடம் எடுத்த முடிவுடன் முற்றுமுழுதாக இருப்பதாகவும் தனக்கு இது சம்பந்தமாக எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்றும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு இரண்டு வாரங்களாக சுகவீனம் என்றும் அதனை நிரூபிப்பதற்கு மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்தை இணைத்து அனுப்பியுள்ளார் ஹரீஸ் எம். பி. இதனடிப்படையில் அவரால் அனுப்பப்பட்ட சத்தியக்கடுதாசியை ஆராய்ந்த உயர்பீடம், ஹரீஸின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு அவரை உயர் பீடத்தில் இருந்து இடைநிறுத்தும் தீர்மானத்தை நீக்கிக் கொண்டதாக மு. காவின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)



## வகுப்பறை கட்டடம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக கையளிப்பு

பட்டிருப்பு, ஓக. 30

மட்டக்களப்பு, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் 2001 ஆம் ஆண்டில் க. பொ. த. சாதாரண தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களால் தரம் 09 மாணவர்களின் வகுப்பறைக் கட்டடமானது மூன்று இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு கற்றல் நடவடிக்கைகளுக்காக புதன்கிழமை கையளிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம். சபேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தரம் 9 மாணவர்கள் கலந்து கொண்டனர். (எ)

## தாய்ப் பாலூட்டலின் அணுமுறைகள் புதிய உத்திகள் பற்றிய கருத்தரங்கு



மட்டக்களப்பு, ஓக. 30

தாய்ப் பாலூட்டலின் புதிய அணுமுறைகள் மற்றும் புதிய உத்திகள் பற்றிய விசேட கருத்தரங்கு ஒன்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

தாய்ப் பாலூட்டல் மாதமான ஒகஸ்ட் மாத செயல்பாடுகளில் ஒன்றாக மட்டக்களப்பு பிராந்திய மருத்துவமனைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் பணியாற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் விசேட கருத்தரங்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளிதரனின் வழிகாட்டுதலில், தாய் சேய் நலப்பிரிவின் பிராந்திய வைத்திய அதிகாரி, மருத்துவர் கே. கிரிசுதன் ஒருங்கிணைத்திருந்த இந்தக் கருத்தரங்கில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் குழந்தைகளுக்கான



மருத்துவ நிபுணர் ஆர். மதன், வளவாளராக கலந்து கொண்டிருந்தார்.

பாலூட்டலின் முக்கியத்துவமும் அதனை ஊக்குவிப்பதற்கான அணுமுறைகள் மற்றும் அதற்காக தற்போதைய காலத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய புதிய உத்திகள் மற்றும் தகவல்களை தெளிவூட்டும் அடிப்படையில் குறித்த கருந்தரங்கு நடைபெற்றது.

குழந்தைகளின் ஆரோக்கியத்துக்காக தாய்ப்பால் கொடுப்பதன் மதிப்பை ஊக்குவிக்கும் நோக்கோடு, யுனைடெட் ஸ்டேட்ஸ் தாய்ப் பாலூட்டும் கூட்டணி ஒகஸ்ட் மாதத்தை 2011 ஆம் ஆண்டு அறிவித்து தொடர்ந்து அனுஷ்டித்து வருகிறது. (எ)

## இரும்புச்சத்து அடங்கிய பிஸ்கட் கிழக்கில் அறிமுகப்படுத்தப்படும்

### ஆயுர்வேத ஆணையாளர் நபீல் தெரிவிப்பு

காரைதீவு, ஓக. 30

கிழக்கு மாகாணத்தில் நமக்கெல்லாம் தேவையான இரும்புச்சத்து அடங்கிய பிஸ்கட் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்-

இவ்வாறு கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர், மருத்துவர் எம். ஏ. நபீல் தெரிவித்தார்.

காரைதீவு ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும் மருந்தக பொறுப்பு வைத்திய அதிகாரி, மருத்துவர் எம். சி. எம். காலித் தலைமையில் காரைதீவு இராமகிருஷ்ண சங்கம பெண்கள் பாடசாலையில் புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இருப்புச்சத்து நிறைந்த பிஸ்கட் தற்சமயம் தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீடத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கான முடிவு வந்ததும் கல்முனையில் வைத்து அதனை அறிமுகப்படுத்தி அனைவருக்கும் வழங்க வைத்திருக்கின்றோம் என்ற செய்தியை மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மருத்துவர் காலித் ஆயுர்வேதத்துக்கு கிடைத்த ஒரு பொக்கிஷம். அவர் எழுதிய நூலை





நாங்கள் அச்சிட்டு வெளியிடத் தயாராக இருக்கின்றோம்- என்றார்.

இந்த நிகழ்வின்போது, மாகாண ஆணையாளராக அண்மையில் பதவி உயர்வு பெற்ற மருத்துவர் நபீல், நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மத்திய மருந்தகம் நடத்திய மாணவர்களுக்கு இடையிலான ஆயுள்வேதம் பற்றிய வினா விடை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன .

அத்தோடு மருத்துவர் காலித் எழுதிய "சுற்றாடலும் சுக வாழ்வும்" என்ற சிறுசஞ்சிகை இலவசமாக அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர், மருத்துவர் சகீலா ராணி இஸ்ஸதீன், நிந்தவூர் ஆதார மருத்துவமனை வைத்திய அத்தியட்சகர், மருத்துவர் எம். பி. அப்துல் வாஜித், உதவி கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா, பிரதேச சபை செயலாளர் அ. சுந்தரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (எ)

## வைக்கோலை எரிக்க வேண்டாம் விவசாயிகளுக்கு ஆலோசனை

அம்பாறை, ஓக. 30

அம்பாறை மாவட்டத்தில சிறுபோக அறுவடை நிறைவு பெற்ற நிலையில் வயலில் காணப்படும் வைக்கோலை தீயிட்டு எரிக்க வேண்டாம் என விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாய விரிவாக்கல் பிரிவினர் ஊடாக விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.


வயலிலுள்ள வைக்கோலை மாடுகளுக்கு உணவாகப் பயப்படுத்துவதற்காக சிலர் வீடுகளில் சேமித்து வைக்கின்றனர். இதனைத் தவிர அதிகமான விவசாய நிலங்களில் வைக்கோல் தற்போது தீயிட்டு எரிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் விவசாய நிலங்களில் காணப்படும் பயிர் வளர்ச்சிக்கு பயன்தரும் நுண்ணுயிர்கள் அழிக்கப்படுகின்றன.

இவற்றை வயலிலேயே விட்டு நீர் கட்டி வயலை உழும்போது வயலின் போசணை வளம் பல மடங்கு அதிகரித்து நெற் பயிர்கள் நன்றாக செழிப்பாக வளரும்.

எனவே, விவசாயிகளுக்கு சேதனைப் பசளையாக மாறக்கூடிய வைக்கோலை எரிப்பதனை தவிர்த்துக் கொள்ளுமாறு விவசாய போதனாசிரியர்கள், விவசாய அமைப்புகளுக்கும், விவசாயிகளுக்கும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அறிவுறுத்தல் வழங்கி வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நைஜீரியாவில் வெள்ளம் 49 பேர் உயிரிழந்தனர்!

நைஜர், ஓக. 30

**நைஜீரியாவின் வடகிழக்கு மாகாணங்களான ஜிஜாவா, அடமவா, தரபாவில் கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.**

இந்த மழையால் 49 பேர் உயிரிழந்தனர். 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கனமழை தொடர்ந்து பெய்வதால் மக்களை மீட்கமுடியவில்லை என்று நைஜீரிய அரசு தெரிவித்துள்ளது. இதனால், பாதிப்புகள் மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது.

# தக்காளித் திருவிழாவில் 22 ஆயிரம் பேர் பங்கேற்பு

## 150 தொன் தக்காளி குவிப்பு

மட்ரிட், ஓக. 30

ஸ்பெயினின் தக்காளித் திருவிழாவில் 150 தொன் தக்காளி பழங்கள் பயன்படுத்தப்பட்டன. இதில், 22 ஆயிரம் பேர் பங்கேற்றனர் என்று தெரிய வருகின்றது.

ஸ்பெயினில் ஆண்டு தோறும் ஓகஸ்ட் இறுதி வாரத்தில் தக்காளி திருவிழா நடப்பது வழமை. பல தசாப்தங்களாக இந்த விழா கொண்டாடப்படுகின்றது.

இந்த ஆண்டு, ஸ்பெயின்னி புனோல் நகரில் பாரம்பரிய தக்காளி திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், வெள்ளை நிற உடையில் ஆண்கள், பெண்கள் என 22 ஆயிரம் பேர் வரை கலந்து கொண்டனர். இந்தத் திருவிழாவுக்காக நன்றாக விளைந்த, சிவப்பு நிற 150 தொன் தக்காளிகள் பயன்படுத்தப்பட்டன.



பல்வேறு நாடுகளிலிருந்தும் இந்தத் திருவிழாவில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். ஒருவரிடம் 16.7 டொலர் - நம் நாட்டு மதிப்பில் 5 ஆயிரம் ரூபாய் கட்டணம் வசூலிக்கப்பட்டது. விழாவில் ஒருவர் மீது ஒருவர் தக்காளிகளை வீசி சண்டை நடத்தது பல மணி நேரம் நீண்ட இந்தத் திருவிழா நடந்தது.


இந்தத் தக்காளிகள் அதிக அமிலத்தன்மையுடன் புளிப்பு சுவை நிறைந்தவை. மனிதர்கள் உண்பதற்கு ஏற்றவை அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சூரியனிலும் 500 இலட்சம் கோடி மடங்கு; ஒளிரும் குவாசரஸ் கண்டறியப்பட்டது!

லண்டன், ஓக. 30

பிரபஞ்சத்தில் சூரியனை விட 500 ட்ரில்லியன் (500 இலட்சம் கோடி) மடங்கு பிரகாசமான ஒளிரும் துடிப்பண்டத்தை (குவாசர்ஸ்) வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஐரோப்பிய தெற்கு ஆய்வகத் தின் (இ. எஸ். ஓ.) வி. எல். ரி. எனப்படும் மிகப்பெரிய தொலைநோக்கி மூலம் இதை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதுவரை எங்கும் கண்டிராத அளவுக்கு இது மிகவும் பிரகாசமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.



மத்தியில் கருந்துளைகளைக் கொண்டு விண்மீன் திரள்கள் சூழ்ந்து ஒளிர்வது "குவாசர்ஸ்" என்று அழைக்கப்படுகிறது. மத்தியில் உள்ள கருந்துளைகளால் குவாசர்ஸ் இயக்கப்படுகிறது. இந்த கருந்துளைகளில் வாயு மற்றும் தூசுகள் அண்டும்போது மின்காந்த கதிர்வீச்சு வெளியிடப்படுகிறது. இதுவே, அதன் ஒளிரும் தன்மைக்கு காரணமாக அமைந்துள்ளது. இந்த நிலையில் தான் இதுவரை கண்டறியப்படாத பிரகாசமான குவாசர் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த குறிப்பிட்ட, குவாசர்ஸ் வேகமாக வளர்ந்து வருகிறது என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சூரியனை விட 500 இலட்சம் கோடி மடங்கு பிரகாசமுடைய இந்த குவாசருக்கு ஜே0529-4351 என்று பெயரிடப்பட்டுள்ளது இந்த குவாசர் பூமியிலிருந்து வெகு தொலைவில் இருப்பதால், அதன் ஒளி நம்மை வந்தடைய 1200 கோடி ஆண்டுகளுக்கு மேல் எடுத்துக்கொண்டதாக வானியலாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)



# குஜராத்தில் கனமழை; 28 பேர் உயிரிழந்தனர்!

காந்திநகர், ஓக. 30

குஜராத்தில் கனமழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில் கடந்த 4 நாட்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 28 ஆக அதிகரித்துள்ளது.


குஜராத்தில் கடந்த 4 நாட்களாக பெய்துவரும் தொடர் கனமழையால் மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

வீடுகள் இடிந்தும், வெள்ளத்தாலும் இதுவரை 28 பேர் உயிரிழந்தனர். இதேநேரம், வெள்ளத்தால் 17 ஆயிரத்து 800 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். 12 ஆயிரம் பேர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# உக்ரைனின் தாக்குதலில் எண்ணெய் கிணறு எரிகிறது

லண்டன், ஓக. 30

ரஷ்யாவில் உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் அந்த நாட்டின் எண்ணெய்க் கிணறு கொழுந்துவிட்டு எரிவதாக 'ரொய்ட்டர்ஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.



இது குறித்து அந்தச் செய்தி நிறுவனம் கூறியவை வருமாறு,

ரஷ்யாவின் கிரோவ் பிராந்தியம், கோட்டல்நிச் பகுதியில் அமைந் துள்ள எண்ணெய்க் கிடங்கில் உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தி யது. இதில் அந்த எண்ணெய் கிடங்கு கொழுந்துவிட்டு எரிந்து வருகிறது. உக்ரைன் எல்லையிலிருந்து 1,500 கிலோ மீற்றருக்கும் அதிகமான தொலைவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும், இந்தத் தாக்குதல் எப்போது நடத்தப்பட்டது என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

# ஹமாஸால் பிடிக்கப்பட்ட பணயக் கைதி மீட்கப்பட்டார்!

நியூயோர்க், ஓக. 30

ஹமாஸ் அமைப்பால் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி பணயக் கைதியாக பிடிக்கப்பட்ட ஒருவரை தாம் மீட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்குள் புகுந்து நடத்திய தாக்குதலில் 1139 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

இதையடுத்து பலஸ்தீனம் மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இந்தப் போரில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டனர். 88 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.

இந்த நிலையில், ஹமாஸ் அமைப்பு பணயக்கைதிகள் பரிமாற்ற அடிப்படையில் 105 பேர் மீட்கப்பட்டனர். 8 பேரை இஸ்ரேல் மீட்டுள்ளது. இந்நிலையில், அல் கலடி என்பவரை இஸ்ரேல் படைகள் மீட்டனர். மீட்கப்பட்டவர் இஸ்ரேலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனைய தேர்தல்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் உள்ளூராட்சி தேர்தல்!

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறீ ரத்தனாயக்க தெரிவித்துள்ளார்.**

தேர்தல் ஆணைக்குழுவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழு நேற்று முன் தினம் கூடியது. உயர்நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்துவது தொடர்பில் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ஏனைய தேர்தல்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்படும்.

மேலும் ஆணைக்குழுவின் நிர்வாக நடவடிக்கைகள், ஒப்புதல் அளிக்கவேண்டிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எவரும் அரச சொத்துகளை பயன்படுத்த முடியாது. அவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கபெறும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தல் பிரசார பணிகளுக்காக பேருந்துகள் மற்றும் உலங்கு வானூர்திகளை கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள தடை கிடையாது எனவும் கூறப்பட்டது. (அ)

# பல குற்ற செயல்களுடன் தொடர்புள்ள கீத்மால் டுபாயில் இருந்து நாட்டுக்கு!

கொழும்பு, ஓக. 30

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபராகக் கருதப்படும் கீத்மால் பெனோய், டுபாயில் இருந்து நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபராகக் கருதப்படும் கீத்மால் பெனோய், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் டுபாயில் இருந்து நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர், பாதாள உலகக் குழுத் தலைவரான மத்துகம ஷானின் உதவியாளர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

# எம்.பியாகிறார் பரணவிதான

கொழும்பு, ஓக. 30

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ள நிலையில் குறித்த வெற்றிடத்திற்கு கருணாரத்ன பரணவிதானவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தலதா அத்துக்கோரள, அண்மையில் தமது பதவியை இராஜினாமா செய்ததன் மூலம் வெற்றிடமாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கே பரணவிதான நியமிக்கப்பட்டுள்ளார்.

# அலி சாஹிர் மௌலானாவை கட்சியில் இருந்து நீக்க தடை!

கொழும்பு, ஓக. 30

அமைச்சர் அலி சாஹிர் மௌலானாவை முஸ்லிம் காங்கிரசில் இருந்து நீக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்த முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் அலி சாஹிர் மௌலானாவின் கட்சி உறுப்புரிமை பறிக்கப்படுவதை தடுக்கும் வகையில் கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முறைப்பாட்டாளர் அலி சாஹிர் மௌலானா சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் ஆலோசனையின் பேரில் சந்தக ஜயசுந்தர முன்வைத்த வாதத்தை பரிசீலித்த மாவட்ட நீதிபதி இந்த தடை உத்தரவை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை அமுல்படுத்த உத்தரவிட்டுள்ளார்.

கட்சியின் முடிவை மீறி செயற்பட்டமை குறித்து விளக்கம் கொடுக்க அலி சாஹிர் மௌலானாவுக்கு 01 வார கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பான கடிதம் கடந்த 21 ஆம் திகதி பதிவுத் தபால் மூலம் மௌலானா தரப்புக்கு கிடைத்துள்ளது.

அந்த ஒரு வார காலம் நேற்று முன் தினம் நள்ளிரவுடன் முடிவடைந்த நிலையில் நேற்றைய தினமே முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் மருதமுனை பிரதேசத்தில் ஒன்று கூடி அலி சாஹிர் மௌலானாவை கட்சியில் இருந்து உத்தியோகபூர்வமாக நீக்க நடவடிக்கைகளை எடுத்திருந்த நிலையில், கூட்டம் கூடும் முன்பே நீக்கும் தீர்மானத்தை எடுக்க தலைவர், செயலாளர், அடங்கலான உயர்பீட உறுப்பினர்களுக்கு இடைக்கால தடை உத்தரவை மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ளது. (அ)

# இந்திய மீனவர் படகு விபத்து: ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது

## மற்றையவரை தேடித் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 30

கச்சதீவுக்கு அருகில் இந்திய மீனவர்களின் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த நிலையில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தியா, தமிழ்நாடு, இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து கடந்த 26 ஆம் திகதி விசைப்படகில் மீன்பிடிக்க சென்ற, நான்கு மீனவர்கள் மீன் பிடித்து விட்டு கரை திரும்பிய போது சூறைக்காற்று காரணமாக நடுக்கடலில் படகு, மூழ்கி விபத்துக்குள்ளானது.

இதன்போது மூழ்கிய படகில் இருந்த இரண்டு மீனவர்கள் நீந்தி, இலங்கை கடற்படையினரின் உதவியால் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரக அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் விமானம் மூலம் அவர்கள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர்.

இந்நிலையில் மாயமான இருவரை இராமேஸ்வரம் மீன்வளத்துறை அதிகாரிகளின் அனுமதியோடு மீனவர்கள் இரண்டு நாட்களாக தேடி வந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை நடுக்கடலில், மாயமான எமரிட் என்ற மீனவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உடலை கைப்பற்றிய மீனவர்கள் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திற்கு உடலை எடுத்து சென்றனர்.

இதையடுத்து உடற்கூற்று பரிசோதனை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மரைன் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலும் நடுக்கடலில் மாயமான வெள்ளைச்சாமி என்ற மீனவரை அரசாங்கம் தேடித் தர வேண்டும் என குறித்த மீனவரின் உறவினர்கள், உயிரிழந்த மீனவர் எமரிட்டின் குடும்பத்திற்கு அரசு நிவாரண தொகை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# வாக்குச்சீட்டுகள் அடங்கிய பொதிகள் அனுப்பிவைப்பு

கொழும்பு, ஓக. 30

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய பொதிகள் உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால்மூல வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய பொதிகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக தபால் மூல வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளுக்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட தபால் ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் 7 லட்சத்து 12 ஆயிரத்து 319 வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் செப்ரெம்பர் 4,5 மற்றும் 6ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

அதற்கிணங்க மாவட்டச் செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் செப்ரெம்பர் 4ஆம் திகதி வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் மேற்படி 3 தினங்களிலும் தபால் மூலம் வாக்களிப்பை மேற்கொள்ள முடியாதவர்களுக்காக செப்டம்பர் மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகள் மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ)

# வேட்பாளர்களின் பெயர்கள் உள்ளிட்ட விடயங்களுடன் வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஓக. 30

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள், குறித்தொதுக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அரசியல் கட்சி/வேறு கட்சியின் பெயர் உள்ளிட்ட விடயங்களுடனான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அதிவிசேட வர்த்தமானி தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 39 வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் சின்னங்கள் தொடர்பான விடயங்கள் அடங்கிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# கிளப் வசந்த கொலை; மேலும் இருவர் கைது!

கொழும்பு, ஓக. 30

"கிளப் வசந்த" என அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி மற்றும் சந்தேகநபர்கள் பயணித்த காரை செலுத்திய சாரதி என சந்தேகிக்கப்படும் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

32 மற்றும் 29 வயதான இரண்டு சந்தேகநபர்களும் பாணந்துறை பின்வத்த பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

"கிளப் வசந்த" கொலை தொடர்பில் பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட மூவர் கடந்த 23ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் 90 நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

ஜூலை 8ஆம் திகதி அத்துருகிரியவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் "கிளப் வசந்த" உள்ளிட்ட இருவர் கொலை செய்யப்பட்டனர். (அ)

# தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் தீக்கிரை

கொழும்பு, ஓக. 30

மீரிகம பொகலகம பிரதேசத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக பல்லேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் குறித்த பிரசார அலுவலகத்தில் இருந்த மேசைகள், கதிரைகள் மற்றும் விளம்பரப் பலகைகளுக்கு சிலர் தீ வைத்து எரித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பல்லேவெல பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, தீ வைத்த நபர் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பல்லேவெல பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13இன் அதிகாரங்க...

மதத் தலைவர்கள், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரிடமிருந்து முறையாக கருத்துகளைப் பெற்று, தற்போதைய அரசமைப்பை மாற்றி, புதிய அரசமைப்பை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தி - ஐக்கிய மக்கள் கூட்டணி அர்ப்பணிப்புடன் உள்ளது.

இந்தச் செயல்முறையில், எமது கொள்கை என்னவென்றால் தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய பாராளுமன்ற முறைமைக்கு மாற்றுவதாகும்.

முடிவெடுக்கும் செயல்முறையில் குடிமக்களை செயலில் ஈடுபடுத்த, கிராம அரசு மற்றும் நகர அரசு எனப்படும் சமூக அடிப்படையிலான ஜனநாயக நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை 13 ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த எனது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. அரசமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியால் ஒரு தலைப்பட்சமாக மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்பதுடன், மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை வலுப்படுத்தி, மாகாண சபைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம். 6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும்.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவை வலுப்படுத்தப்பட்டு, அவற்றின் நோக்கங்களை திறம்பட செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற வசதிகளை வழங்குவோம். பாதுகாப்புத் தேவைகளுக்கு தேவையற்ற அனைத்து நிலங்களும் தாமதமின்றி அவற்றின் உரிமையாளர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படும்.

சட்டவிரோதமாக காலம் தாழ்த்தப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தல்களை விரைவாக நடத்த தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் நாளாந்தம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்

நீதித்துறை நிர்வாகத்தில் நிறைவேற்று அதிகாரத்தின் தலையீட்டைத் தடுக்க சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன், நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் செயல்திறனை நிறுவ தேவையான சட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

தோட்டத் தொழிலாளர்களை காணிக்கு சொந்தமான சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதற்கான அரசாங்கக் கொள்கையை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துவதோடு, தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வதற்கு முறையான சம்பளம் உறுதிப்படுத்தப்படும். வரிசையின்றி விரைவாக கடவுச்சீட்டுகள் மற்றும் அடையாள அட்டைகளை வழங்க, ஒவ்வொரு செயலகத்திலிருந்தும் பெற முடியும் என்பதை உறுதி செய்ய அனைத்து பிரதேச செயலக அலுவலகங்களும் இலங்கை அரசாங்க வலையமைப்புடன் இணைக்கப்படும்.

தொழில் வல்லுநர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பும் நியாயமற்ற வரிக்கட்டமைப்பை மாற்றியமைப்போம்.

அரச காணிகளில் வசிக்கும் காணி அனுமதி பெற்றவர்களுக்கு 5 ஆண்டுகளுக்குள் உறுதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கை முழுவதும் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இலவச பொதுப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## போலி வாக்குறுதி...

பெறும் வேலைத்திட்டம் என்பன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

"ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தை வியாழக்கிழமை வெளியிட்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தலுக்கான எனது கொள்கைப் பிரகடனம் வெறுமனே கொள்கைப் பிரகடனமாக மாத்திரமின்றி நாட்டின் மீட்சிக்காக செயல்படுத்த வேண்டிய துரித வேலைத் திட்டங்களை உள்ளடக்கியதாகவே அமைந்திருக்கிறது.

மற்றைய வேட்பாளர்கள் நீண்ட கால தீர்வுகளை சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தற்போதைய தருணத்தில் இலங்கைக்கு நீண்ட கால தீர்வுத் திட்டங்கள் பொருத்தமாக அமையாது. இலங்கை தற்போது நெருக்கடிக்குள் இருக்கிறது. பொருளாதாரமும் அரசியலும் சரிவடைந்திருக்கிறது. 2022 இல் நாட்டிலிருந்த குழப்ப நிலைக்கு மத்தியில் நாட்டை ஏற்றுக்கொள்ள எவரும் இருக்கவில்லை.

என்னோடு பணியாற்ற வந்த பிரதமரும் அமைச்சர்களும் என்னுடன் உள்ளனர். எவ்வாறாயினும், 2023களில் நாம் பொருளாரத்தை நிலைத்தன்மைக்கு கொண்டு வந்தோம். பொருளாதார நிலைத்தன்மையை முன்னோக்கி கொண்டு சென்றிருக்கிறோம். நிலைத்தன்மையைப் பாதுகாக்க எதிர்வரும் காலங்களிலும் பாதுகாக்க வேண்டும். அதற்காக இலங்கையை ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்த்த வேண்டியுள்ளது.

போலி வாக்குறுதிகளை வழங்கி நாட்டை மீண்டும் சரிவுக்குள் தள்ளிவிட வேண்டிய தேவை எனக்கு இல்லை. பொருளாதாரம், அரசியல் என்பன சரிவடைந்த நாடுகளின் நிலையை இன்று நாம் காண்கிறோம். பங்களாதேஷும் மாலைதீவும் அடைந்துள்ள நிலைமை நமக்குத் தெரிகிறது. நாம் கண்ட துர்ப்பாக்கிய நிலையை மீண்டும் உருவாக்கினால் அடுத்த சந்ததியின் எதிர்காலம் சூனியமாகிப் போகும்.

அதனால் நாட்டில் நிலைத்தன்மையைப் பாதுகாத்து பொருளாதாரத்தை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இளையோரின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான சட்டத்தைத் தயாரித்துள்ளோம். அதனை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக மாறுபட்ட பொருளாதார திட்டங்களை செயல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இலங்கை - சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் மற்றும் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாம் செயல்பட வேண்டியது அவசியமாகவுள்ளது. அதேபோல் சீனா, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கிகளுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் செயல்பட வேண்டிய அவசியமும் உள்ளது.

தற்போதும் நாம் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே செயல்படுவதால் எதிரணி வேட்பாளர்கள் அதனை செய்யத் தயாராக உள்ளனரா என்பதே எனது கேள்வியாகும். இவற்றைத் திருத்தம் செய்யாமல் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த அவர்களால் முடியுமா? என்றும் ஜனாதிபதி கேள்வியெழுப்பியுள்ளார்.(எ)

## என்னை...

"நமக்காக நாம்" தேர்தல் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்ப் பொது வேட்பாளரை பல தமிழ் கட்சிகள் ஆதரிக்கின்றன. சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் தேவையற்ற முயற்சி எனவும் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் கூறிவருகின்றனர்.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என வடக்கு கிழக்கை சேர்ந்த 83 சிவில் அமைப்புகளும் 7 அரசியல் கட்சிகளும் இணைந்து தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பாக எடுத்த முடிவு. இந்த முடிவென்பது எமது இனத்தின் விடிவுக்காக எடுக்கப்பட்ட தீர்மானமாகும். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை உதாசீனப்படுத்தி வரும் ஆட்சியாளர்களுக்கு தமிழ் மக்கள் ஒன்று திரண்டு வழங்கும் பரிசாகவே தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் அமைந்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் நாங்கள் மூன்றரை ஜனாதிபதிகளை கண்டிருக்கின்றோம். மூன்றரை ஜனாதிபதிகளுடனும் பேசியிருக்கின்றோம். எல்லோருமே எம்மை ஏமாற்றியிருக்கின்றார்கள். தற்போது மக்களால் தெரிவு செய்யப்படாது பாராளுமன்றம் மூலம் தெரிவு செய்யப்பட்டு அரை ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவும் ஏமாற்றியுள்ளார்.

தமிழ் மக்களின் குறியீடாகவே தமிழ்ப் பொது வேட்பாளராக களமிறங்கியுள்ளேன். கடந்த எட்டு ஜனாதிபதிகள் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளார்கள். இனிமேலும் நாங்கள் ஏமாறத் தயாரில்லை என்பதுடன் புதிதாக தெரிவு செய்யப்படும் ஒன்பதாவது ஜனாதிபதிக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு உடனடியாகவே வழங்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தும் வகையில் செப்ரெம்பர் 21 ஆம் திகதி தமிழ் மக்கள் அணிதிரண்டு தவறாது சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். வாக்குச்சீட்டில் உள்ள சங்கு சின்னத்துக்கு இடுகின்ற ஒவ்வொரு புள்ளடியும் எமது உரிமைக்கான குரல். இவ்வாறு சங்கு சின்னத்துக்கு போடப்படும் ஒவ்வொரு புள்ளடியும் வடக்கு - கிழக்கு தமிழர்களை பெரும் சக்தியாக வலுப்படுத்துவதுடன் இலங்கை, இந்தியா, சர்வதேச நாடுகளுக்கும் தமிழர் பலத்தை வெளிக்காட்ட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## காணாமலாக்க...

இத்தனை ஆண்டுகளாகியும் தொடர்ந்து அலைக்கழிக்கப்படும் எங்கள் தாய்மாருக்கும், உறவுகளுக்கும் உரிய நீதி எதனையும் வழங்கிடாது தொடர்ந்து காலதாமதங்களாலும், அலைக்கழிப்புக்களாலும் வஞ்சித்து எங்கள் கூட்டு மனவலுவை வீழ்த்தி எம்மை உதிரிகளாக்க முயலும் சர்வதேச சமூகங்களுக்கும், சிங்கள - பௌத்த பேரினவாத ஒடுக்குமுறை சிறீ லங்கா அரச கட்டமைப்புக்கும் எங்களின் கூட்டு ஒருமைப்பாட்டினை உணர்த்தவும், எத்தனை ஆண்டுகளானாலும் எங்கள் தலைமுறைகளின் குரல்கள் ஒலித்துக் கொண்டேயிருக்கும் என்பனை உணர்த்துவதற்கும் ஒன்று திரள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகமாக உணர்வுரிமையோடு அழைத்து நிற்கின்றோம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சுமந்திரன்...

எதிராக கிழக்கு மாகாண தமிழ் அரசு கட்சியினர் மத்தியில் எதிர்ப்புகள் அதிகரித்து வருகின்றன. அவர்கள் இருவரும் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு எதிராக தெரிவித்து வரும் கருத்துக்களுக்கு எதிராகப் பலரும் கட்சிக்குள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் முடிவை தமிழ் அரசு கட்சி எடுக்க வேண்டும், இல்லையேல் தங்களின் மனச்சாட்சிக்கு அமைவாக முடிவெடுக்கவுள்ளதாகவும் அந்தக் கட்சியினர் தெரிவித்துள்ளனர். அண்மைக்காலமாக தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு ஆதரவான நிலைமை அதிகரித்துவரும் பின்னணியிலேயே திருகோணமலை தமிழ் அரசு கட்சிக்குள் கடும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. (எ)

## மக்களின்...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் இதுவரையில் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

செப்ரெம்பர் முதலாம் திகதி நடைபெறும் தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

அந்தத் தீர்மானமும் மக்களின் கருத்துக்கமையவே எடுக்கப்படும் அத்தோடு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை புரிந்து கொண்டு செயல்படக்கூடிய பிரதான வேட்பாளர்களுடன் பேசி வருகின்றோம்.

தமிழ்ப் பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான பா. அரியநேத்திரனை நான் மதிக்கின்றவன்.

கடந்த கால அனுபவங்களையும் அம்பாறை மாவட்ட மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதிகளையும் கவனத்தில் கொண்டு நாம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று கட்சி தீர்மானிக்கின்றதோ அவருக்கே மக்கள் வாக்களிக்க எதிர்பார்த்திருக்கின்றனர்.

எதுவாக இருப்பினும் மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக தமிழ் அரசு கட்சி செயல்படாது என கலையரசன் எம். பி. உறுதிபடக் கூறினார். (எ)

## இந்திய...

இதேவேளை, அஜித் டோவலை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டோர் மரியாதை நிமித்தமாக கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துதல் மற்றும் சமூக பொருளாதார விடயங்களை மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது. (எ)

## நீதிமன்றம்...

கடந்த 12 வருடங்களாக நடைபெற்று தற்போது விசாரணைகள் யாவும் நிறைவடைந்த நிலையில் நேற்றைய தினம் தீர்ப்புக்காக திகதியிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கின் வழக்கு தொடுநர் தரப்பிலான சாட்சியங்கள் யாவும் இந்த ஆண்டு மார்ச் மாதம் நிறைவடைந்து ஒரு மாத காலத்துக்குள் எதிர்த்தரப்பு சாட்சியங்களுக்காக ஏற்கனவே தவணை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது குறித்த 52 சந்தேக நபர்களில் 4 சந்தேக நபர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏனைய 48 சந்தேக நபர்களும் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த 4 சந்தேக நபர்களுக்குமான தீர்ப்பு வழங்க மன்று ஒத்திவைக்கப்பட்ட நிலையில், மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த 4 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

வாடி தொடர்பான உரிமை விடயத்தில் முஸ்லிம் - தமிழ் கடற்றொழிலாளர்களிடைய நடந்த வழக்கில் சாராரும் மோதியிருந்தனர். இதனுடன் தொடர்புடைய 52 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வரிசையை ஏற்படுத்திய அரசுக்கு வாக்களிப்பதா?

## கடவுச்சீட்டு பெறச் சென்ற மக்கள் விசனம்

கொழும்பு, ஒக. 30

**கடவுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவும் நீண்ட வரிசையை ஏற்படுத்திய அரசாங்கத்துக்கு வாக்களிக்க வேண்டுமா என பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.**

கடவுச்சீட்டினை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் வவுனியா குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் முன்பாக ஆறு நாள்களுக்கு மேல் அடிப்படை வசதியின்றி வீதி ஓரத்தில் இரவு, பகலாக காத்திருக்கவேண்டிய நிலையை ஏற்படுத்திய இந்த அர சாங்கத்திற்கு வாக்களிக்க வேண் டுமா என கடவுச்சீட்டினை பெற்றுக் கொள்ள காத்திருக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர்

குறித்த திணைக்களத்தின் ஊடாக ஒருநாளைக்கு 25 நபர்களுக்கும், ஒருநாள் சேவையின் கீழ் 25 நபர்க ளுக்கும் , ஏற்கனவே சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்து குறிப்பிட்ட காலம் முடிவடைந்தும் கடவுச்சீட்டினை பெறாதவர்கள் 10 நபர்கள் என ஒரு நாளைக்கு 60 நபர்களுக்கு வவுனியா பிராந்திய குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் கடவுச்சீட் டுகள் வழங்கப்படுகின்றன.

ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டினை பெறுபவர்களில் முக்கிய தேவையுடையவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படை யிலும் கடவுச்சீட்டு விநியோகிக் கப்படுகின்றன.

இந்நிலையில் வவுனியா பிராந் திய குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு முன்பாக கடந்த ஆறு நாட்களாக வரிசை யில் 600 இற்கும் மேற்பட்ட மக்கள் கடவுச்சீட்டினை பெறுவதற்காக காத்திருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. (அ)

# சுவாச நோய்கள் அதிகரிப்பு



கொழும்பு, ஒக. 30

நாட்டில் சுவாசம் தொடர்பான நோய்கள் தற்போது அதிகரித்து வருகின்றன என்று சுகாதார அமைச் சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபால தெரிவித்தார்.

சுவாச ஆரோக்கியம் தொடர்பான தேசிய சுகாதார மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் நடந்த கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், நகரமயமாக்கல், வளி மாசுபாடு, காலநிலை மாற்றம் போன்ற காரணிகளால் சுவாச ஆரோக்கியம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இதனால் நாட்டில் சுவாச நோய்களின் ஆபத்தைக் குறைக்கும் நோக்கில் பல வேறு திட்டங்களை ஆரம்பிப்பதற் குத் தீர்மானித்துள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மொட்டுக் கட்சியில் இருந்து சஜித்துடன் இணைந்த எம்.பி!

கொழும்பு, ஒக. 30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க தீர்மானித் துள்ளதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

இவர் கடந்த தேர்தலில் கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்திற்கு பிரவேசித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னார் சட்டத்தரணிகள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பு

மன்னார், ஒக. 30

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிரான சுவ ரொட்டிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, மன்னார் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக நேற்று அழைக்கப்பட்ட அனைத்து வழக்கு விசாரணைகளும் பிறிதொரு தினத்துக்கு தவணை இடப்பட்டுள்ளன.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக கொழும் பில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவரொட்டிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், குறித்த சம்பவத்துடன் தொடர் புடையவர்களை கைது செய்க் கோரியும் மன்னார் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

சட்டத்தரணிகள் நீதிமன்றத்திற்கு சென்ற நிலையில் எவ்வித வழக்கு விசாரணைகளுக்கும் சமுகமளிக்கவில்லை.

இதேவேளை குறித்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னார் சட்டத்தரணிகள் சங்கம் இன்று அடையாள பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளவுள்ளதாக மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இ. கயஸ் பெல்டானோ தெரிவித்தார்.(அ)

# கொழும்பு நீதிமன்றில் கொள்ளையிடப்பட்ட ரூ.24 கோடி பெறுமதியான ஹெரோயின்

கொழும்பு, ஒக. 30

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற வழக்கு அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 24 கோடி ரூபா பெறுமதியான 12 கிலோ ஹெரோயின் காணாமல் போயுள்ளதாக தெரியவந்துள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற வழக்கு அறையில் பாது காப்பாக வைக்கப்பட்டிருந்த இந்த ஹெரோயினை இரகசிய பொலிஸ் உத்தியோகத்தர் போன்று பாவனை செய்து அரசாங்க சுவையாளரிடம் வழங்குவதற்காக எடுத்துச் சென்றமை தெரியவந்துள்ளதால், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை உடனடியாக கைது செய்ய கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே இரகசிய பொலிஸ் பணிப்பாளருக்கு உத்தரவிட்டார்.

இரகசியப் பொலிஸார் என கூறி ஹெரோயினை எடுத்து சென்றதா கக் கூறப்படும் 'தரிந்து யோசித' யார்? என்பதை கண்டறிய உடனடி விசாரணை நடத்துமாறு நீதிவான் இரகசிய பொலிஸ் கண்காணிப் பாளருக்கு உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு முகாமையாளர் உள்ளிட்ட வழக்கு அறையில் பணியாற்றிய அதிகாரிகளிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ)

# மனித கடத்தலில் சிக்கிய பல இலங்கையர்கள் மீட்பு

கொழும்பு, ஒக. 30

மியன்மார், ரஷ்யா, டுபாய், ஓமன் ஆகிய நாடுகளில் மனித கடத்தல் காரணமாக சிக்கித் தவித்த பல இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது-

மியன்மார் மற்றும் தாய்லாந்துடனான பேச்சின் பலனாக, 'சைபர்' குற்றங்களுக்காக மியன்மாரில் சிறை வைக்கப்பட்டிருந்த 55 இலங்கையர்களில் 28 பேரை இதுவரை விடுதலை செய்துள்ளோம்.

எஞ்சியுள்ளவர்களை விரைவில் மீட்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ள ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களில் சுமார் 70 பேரை மீண்டும் இந்த நாட்டுக்கு அழைத்து வர நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகளை பெற்றுத்தர நாங்கள் செயற்பட்டோம்.

டுபாய், ஓமான் போன்ற நாடுகளுக்கு சுற்றுலா விசாவில் சென்று நிர்க்கதியாக இருந்தவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு வெளிவிவகார அமைச்சு செயற்பட்டது.

அத்தகைய நடவடிக்கைகளுக்கு சரியான வெளி நாட்டுக் கொள்கைகள் நிச்சயமாக இன்றியமையாத காரணியாகும். மேலும் அதற்கு ஒரு சிறப்பான குழுவும் தேவை.

எந்தவொரு அரசியல் தலையீடும் இன்றி அந்தக் குழுவினரை வெளிநாட்டு சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எமது அமைச்சுக்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளார். எனவே, நாட்டின் வெளி நாட்டுக் கொள்கையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது- என்றார். (அ)

# ஐந்தாம் தர பிள்ளைகளுக்கு அழுத்தங்களால் நோய்கள்!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 30

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு முகம்கொடுக்க இருக்கும் பிள்ளைகளுக்கு சில பெற்றோர்கள் கொடுக்கும் அழுத் தங்களால் அவர்கள் பல நோய்க ளுக்கு ஆளாகியுள்ளனரென லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் புலமைப்பரிசில் பரீட்சை காரணமாக பெற்றோர் கள் பிள்ளைகளுக்கு கொடுக்கும் அழுத்தங்களினால் வயிற்று வலி, வாந்தி, தலைவலி, சரியான உடல் உழைப்பு இல்லாமை போன்ற பல உபாதைகளுக்கு முகங்கொடுத் துள்ளனரென மருத்துவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு வைத்தியசாலையிலிருந்தும் பல நோய்வாய்ப்பட்ட பிள்ளைகள் பதிவாகியுள்ளனர் என்றும் கூறினார்.

மேலும், குழந்தைகளின் மன நிலையை பாதிக்காமல் அவர்க ளின் கல்விக்கு ஆதரவாக பெற் றோர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குழந்தைகளை சுதந்திரமாக படிக்க அனுமதிக் குமாறு பெற்றோர்களிடம் மருத் துவர் கேட்டுக்கொண்டார். (அ)

# 867 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

கல்முனை, ஒக. 30

தபால் மூல வாக்களிப்புக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களில் 867 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன என்று அம்பாறை மாவட்ட தெரிவத் தாட்சி அலுவலர் சிந்தக அபேவிக் கிரம தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்காக பெறப்பட்ட விண் ணப்பங்களின் எண்ணிக்கை 27 ஆயி ரத்து 645 ஆகும். இதில் ஏற்றுக்கொள் ளப்பட்ட விண்ணப்பங்களின் எண் ணிக்கை 26 ஆயிரத்து 778 எனவும் 867 விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன என்றும் கூறினார்.

42 மையங்களில் தபால் மூல வாக் களிப்பு நடைபெறும் என்றும் ஹார்டி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் வாக்கு எண்ணும் பணி நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐரோ. ஒன்றிய கண்காணிப்பாளர்கள் பணியை ஆரம்பித்தனர்

கொழும்பு, ஒக. 30

ஜனாதிபதித் தேர்தலை கண் காணிப்பதற்காக இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண் காணிப்பாளர்கள் நேற்று காலை தமது கடமைகளை ஆரம்பித்துள் ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமை பார்வையாளராக நாச்சோ சான்செஸ் அமோ உள்ளார்.

நாச்சோ சான்செஸ் அமோ, ஸ்பெயினை பிரதிநிதித்துவப்படுத்தி ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆவார்.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவில் 10 முக்கிய பார்வையாளர்கள் உள்ளனர்.

மேலும், நாடு முழுவதும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக் கைகளில் 26 கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.